**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, PATTUKKOTTAI**

| | | |
|---|---|---|
| Case Number | | CC No. 187 /2024 |
| Deposition of witness | | PW- 6 /LW- 3 |
| Name | | திருமதி. மாலா |
| Husband Name | | திரு.முத்துக்குமார் |
| Village | | நெய்வேலி |
| Taluk | | திருவோணம் |
| Age | | 45/2026 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 26th day of March 2026**

**(சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் எடுப்பதற்கு நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட நீதிமன்ற அலுவலர் திரு.அகிலன், Junior Assistant என்பவரால் சாட்சியிடம் சத்தியபிராமாணம் எடுக்கப்பட்டது)**
**(சாட்சியை நீதிமன்ற முதல்நிலை காவலர் 1375 மனோபாரதி என்பவர் அடையாளம் காட்டி நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டார்)**
**முதல் விசாரணை**

நான் தற்போது நெய்வேலி வடபாதியில் குடியிருந்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். சுமார் 10 வருடங்களுக்கு முன்பு விநாயகர் ஊர்வலத்திற்கு சென்ற போது திருமுருகன், பாலமுருகன் மற்றும் நடராஜ் ஆகியோர் சுதாகர், செல்லதுரையை தடுத்தார்கள். அவர்கள் பிள்ளையாரை கரைத்துவிட்டு வந்துவிட்டார்கள். பின்பு சுமார் 3.00 மணியளவில் சுதாகர் வீட்டில் இருந்தபோது திருமுருகன், பாலமுருகன் மற்றும் நடராஜ் வந்து குச்சிக்காரிமவனே வெளியே வாடா என்று சொன்னார்கள். அப்போது வெளியே வந்த சுதாகரின் மணிக்கட்டில் கம்பால் திருமுருகன் அடித்தார். செல்லதுரையை பாலமுருகன் மற்றும் நடராஜன் கம்பால் வலது கை முட்டியில் அடித்தார்கள். செல்லதுரையின் தலையில் பாலமுருகன் கம்பால் அடித்தார். காயம்பட்ட உடன் அவர்களை அழைத்துக்கொண்டு நாங்கள் பட்டுக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு வந்துவிட்டோம். போலிஸார் என்னை விசாரித்தார்கள்.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை

என் வீட்டிலிருந்து நடராஜன் வீட்டிற்கு எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் 50 மீ இருக்கும். என்னை எங்கு திருமணம் செய்து கொடுத்தார்கள் என்றால் நெய்வேலி வடபாதி ஆகும். சம்பவத்தின்போது எனக்கு ஆதார் அட்டை எங்கிருந்தது என்றால் நெய்வேலி வடபாதி ஆகும். சம்பவத்தின்போது என் கணவர் மற்றும் குழந்தைகள் எங்கு வசித்தார்கள் என்றால் புதுக்கோட்டை, மச்சுவாடி. போலிஸார் என்னை விசாரித்தபோது நான் நெய்வேலி வடபாதியில் வசிப்பதாக கூறினேன். போலிஸார் விசாரணையில் விநாயகர் ஊர்வலத்தில் எதிரிகள் தடுத்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். ஊர்வலத்தில் சுமார் 50 நபர்கள் கலந்து கொண்டார்கள். ஊர்வலத்தின்போது போலிஸார் வந்தார்களா என்றால் இல்லை. சம்பவம் தொடர்பாக காவல்நிலையத்தில் யார் புகார் கொடுத்தது என்றால் சுதாகர் கொடுத்தார். மருத்துவமனைக்கு வந்த போது காவல் நிலையத்தில் ஆஜராகி புகார் கொடுத்தார். மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தபோது நான் சென்றேனா என்றால் இல்லை,மறுநாள் போனேன். சம்வத்தில் எத்தனை நபர்கள் அடித்தார்கள் என்றால் 3 நபர்கள். சம்பவத்தில் 3 நபர்களை தவிர வேறு யாரும் அடிக்கவில்லை என்றால் சரிதான். 3 நபர்களை தவிர வேறு யாரும் அங்கு இல்லை என்றால் சரிதான். என்னைய தவிர வேறு யாருக்கும் தெரியுமா என்றால் தெரியும், என் அக்கா வீட்டுகாரருக்கும் தெரியும்.என்னை போலிஸார் எப்போது விசாரித்தார்கள் என்றால் 2 நாட்கள் கழித்து விசாரித்தார்கள். எங்கு வைத்து விசாரித்தார்கள் என்றால் சுதாகர் வீட்டில் வைத்து விசாரித்தார்கள். சம்பவத்தில் பயன்படுத்திய கம்பு எங்கிருந்து வந்தது என்று எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது, ஆனால் நான் பார்த்தபோது கையில் கம்பு இருந்தது.

3 பேர் கையிலும் கம்பு இருந்ததா என்றால் இருந்தது. சுதாகர் மற்றும் செல்லதுரைக்கு இரத்தகாயம் ஏற்ப்பட்டதா என்றால் ஆமாம். இருவர் சட்டையிலும் இரத்தக்கறை இருந்ததா என்றால் இருந்தது. மருத்துவமனை

சென்றபோது இருவரும் இரத்தக்கறை சட்டையுடன் தான் சென்றார்களா என்றால் ஆமாம். போலிஸார் விசாரணைக்கு வந்தபோது இரத்தக்கறை ஆடைகளை வாங்கிசென்றார்களா என்றால் எனக்கு தெரியாது. சம்பவத்தில் பயன்படுத்திய கம்புகள் என்ன ஆனது என்று தெரியுமா என்றால் எதிரிகள் எடுத்து சென்றுவிட்டார்கள். ஊர்வலம் எங்கிருந்து எப்போது கிளம்பியது என்றால் சுதாகர் வீட்டிற்கு 10 அடி தள்ளி சுமார் 10.30 மணிக்கு கிளம்பியது. ஊர்வலத்தை நான் நேரடியாக பார்த்தேனா என்றால் பார்த்தேன், நானும் கலந்து கொண்டேன். கம்பை வைத்து யார் தேக்கியது என்றால் எதிரிகள் மூவரும் கம்பை ஓங்கி தடுத்தார்கள். பின்பு பேசி அங்கிருந்து கிளம்பிவிட்டார்கள். ஊர்வலத்தில் கல்லை எடுத்து வீசினார்கள். 3 வது எதிரியின் மகன் ரெங்கராஜ் சுதாகர் மற்றும் அவரை சார்ந்தவர்கள் தாக்கியதாக புகார் கொடுத்தது சம்பந்தமாக எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாதுஎன்றாலும், நான் அப்போது புதுக்கோட்டையில் வசித்து வந்ததேன் என்றாலும், காயம்பட்ட நபர்கள் என் சகோதரர் என்பதால் நான் அவருக்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை இல்லை</u>**

மேற்கண்ட சாட்சியமானது திறந்த நீதிமன்றத்தில் சாட்சியானவர் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து / படிக்க கேட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக கையெழுத்து / கைரேகை செய்யப்பட்டது.

ஓம்/- திரு.த.சுதர்சன் M.A.,L.L.B.,
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
பட்டுக்கோட்டை